**ஆயுர்வேத வைத்திய சபை - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஆயுர்வேத வைத்திய சபையின் (சபை) நிதி நிலைமைக் கூற்று மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 **நிதிக்கூற்றுக்கள்**

**--------------------**

1.5.1 **இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

**-----------------------------------------------------------------------------------**

| | குறித்த நியமங்கள் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 1 இன் 132 ஆம் பந்தியின் பிரகாரம், நிதிக்கூற்றுக்களில் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் வெளிப்படுத்தப் பட வேண்டும். எவ்வாறாயினும், சபைக்கு கிடைக்கப் பெற்ற அரச மானியங்களை கணக்கீடு செய்வது தொடர்பிலான கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2020 ஆம் ஆண்டிலிருந்து வைத்திய சபைக்கு கிடைக்கப்பெற்ற அரச மானியங்களை கணக்கீடு செய்வது தொடர்பான கணக்கீட்டு கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். குறிப்பிடப்பட்ட வழுவை நிவர்த்தி செய்து 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 3 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம், பொருண்மையான முன்னைய காலப்பகுதிக்கான வழுக்கள், அந்த வழுக்கள் ஏற்பட்ட காலப்பகுதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஒப்பீட்டு ரீதியான பெறுமதியை மீண்டும் வெளியிடுவதன் மூலம் கடந்த கால ரீதியில் சீராக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கடந்த ஆண்டிலும் அந்த ஆண்டிற்கு முன்னரும் அவ்வாறு செய்யப்பட்டிருக்க வில்லை. இவ்வாறாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடந்த ஆண்டின் சீராக்கும் கணக்கொன்றும் அத்திகதியில் உள்ளவாறான குறிப்பிட்ட கணக்கின் ரூபா 131,462 தொகையான வரவு மீதியும் நிகர சொத்துக்களிலிருந்து கழிப்பதன் மூலம் காட்டப்பட்டிருந்தன. | 2020 ஆம் ஆண்டிற்கான கணக்குகளை தயாரிப்பதில், கடந்த ஆண்டின் சீராக்கும் கணக்கினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | - மேற்குறிப்பிட்டவாறு - |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் 86(இ) பந்தியின் பிரகாரம், | தொடர்புடைய தகவல்கள் நியமத்தின் பிரகாரம் வருங் காலத்தில் முன்வைக்கப்படும். | - மேற்குறிப்பிட்டவாறு - |

ஆதனம், பொறி மற்றும் உபகரணம் தொடர்பிலான பெறுமானத்தேய்வு வீதம் அல்லது பயன்தரு ஆயுட்காலம் என்பன நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 வரையிலும் கூட அகற்றல் செய்யப்பட்டிருக்காத அலுவலக உபகரணங்களுடன் தொடர்புடைய கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு முறையே ரூபா 871,379 மற்றும் ரூபா 818,206 என்பன புத்தகங்களில் இருந்து நீக்கப்பட்டிருந்தன. | அலுவலக உபகரணங்களுடன் தொடர்புடைய ரூபா 871,379 மற்றும் ரூபா 818,206 தொகையான கிரயம் மற்றும் திரண்ட தேய்வு என்பன புத்தகங்களில் இருந்து நீக்கப்பட்டிருந்ததுடன், ஏலத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட பொருட்களில் இருந்து ஏலம் எடுக்க தவறியமை காரணமாக ரூபா 44,568 தொகையான நட்டமொன்று கணக்கிற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. மேலும், அந்த பொருட்களை மீண்டும் ஏலத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டில் ஒருவேளை ஏதேனும் வருமானம் கிடைக்கப் பெற்றால் பொருத்தமான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த வழுக்களை சரிசெய்து 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்படல் வேண்டும். |

### 1.5.3 அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் மாதாந்த இலாபம் ரூபா 180,000 இனை விஞ்சுகின்ற போது மாதாந்த ஊக்கத்தொகையொன்றாக ரூபா 1800 இனை செலுத்துவதற்கும், சபையின் உத்தியோகத்தர்களுக்கு ஒவ்வொரு ரூபா 10,000 அதிகரிப்பிற்கும் 0.5 சதவீதம் என்ற விகிதத்தில் அதிகபட்சமாக ரூபா 2,800 வரை மாதாந்த ஊக்கத் தொகையாக செலுத்துவதற்கும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் 2015 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்றிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 1,711,408 தொகையான ஊக்க தொகையொன்று 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் மாதாந்த வருமானத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்தது. அதில் அவ்வாறானதொரு வருமானம் 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளிலும் கூட பெறப்பட்டிருக்கவில்லை மற்றும் அவற்றில் பற்றாக்குறையொன்றும் ஏற்பட்டது. | இது தொடர்பில் 29 சனவரி 2020 அன்று ஆயர்வேத வைத்திய சபையின் பணிப்பாளரினால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துடன் நடைபெற்ற கலந்துரையாடலில் இலாபத்திற்கு பதிலாக வருமானத்தின் அடிப்படையில் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு ஒப்புக் கொள்ளப்பட்டதுடன் அதற்கான அங்கீகாரம் கிடைக்கப் பெற்றவுடன் அது கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு குறிப்பிடப்படும். | ஊக்கத் தொகையானது முறையான அங்கீகாரத்துடன் மாத்திரமே கொடுப்பனவு செய்யப்படல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத அதிகாரச்சட்டத்தின் III ஆவது பகுதி | | | |
| (i) பிரிவு 11(1)(உ) | பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களினால் அவர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று அங்கத்தவர்கள் சபையின் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த மூன்று அங்கத்தவர்களை நியமிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 1961 இன் 31 ஆம் இலக்க ஆயர்வேத அதிகாரச்சட்டத்தின் 11(1)(உ) பிரிவின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட ஆயர்வேத வைத்தியர்களாக பதிவினை புதுப்பித்தல் செய்த ஆயுர்வேத வைத்தியர்களை மாத்திரம் கருத்தில் கொண்டு தேர்தலை நடத்துவதற்கு 2018 ஒக்தோபர் 23 அன்று நடைபெற்ற கூட்டத்தில் வைத்திய சபையானது தீர்மானம் மேற்கொண்டது மற்றும் அதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | ஆயுர்வேத அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) பிரிவு 18 (இ) மற்றும் (ஈ) | (i) மத்திய அரசுக்காகவும் மாகாண சபைகளுக்காகவும் ஆட்சேர்ப்பு செய்வதற்காக ஆட்களை ஆயுர்வேத மருந்தாளர்களாகவும் ஆயுர்வேத தாதிகளாகவும் பதிவு செய்வதற்கு சபை பொறுப்பாகும். எவ்வாறாயினும், மத்திய அரசுக்காகவும் மாகாண சபைகளுக்காகவும் அந்த ஆட்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான முறையான வழிமுறையொன்று சபையில் அடையாளம் காணப்பட்டு செயல்படுத்தப் பட்டிருக்கவில்லை. | மாகாண சபைகளுக்கான ஆயுர்வேத மருந்தாளர்கள் மற்றும் ஆயுர்வேத தாதியர்களை பதிவு செய்வதற்கான வழிமுறையொன்று ஆயுர்வேத வைத்திய சபையில் இதுவரை செயல்படுத்தப் பட்டிருக்கவில்லை மற்றும் அதன் மீதான ஆயுர்வேத வைத்திய சபையின் கவனத்தை ஈர்ப்பதன் மூலம் முறையான வழிமுறையொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆயுர்வேத அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | (ii) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைத்திய சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள தாதியர்கள் மற்றும் மருந்தாளர்களின் எண்ணிக்கை முறையே 38 மற்றும் 260 ஆக இருந்தமை உறுதி செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பதிவினை சரியான நேரத்தில் புதுப்பித்தல் செய்வதற்கான நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்க வில்லை, குறிப்பிட்ட உத்தியோகத்தர் களின் எண்ணிக்கை நாளதுவரையாக்கல் செய்யப்பட்டிருக்க வில்லை மற்றும் ஓய்வுபெற்ற, காலஞ்சென்ற மற்றும் சேவையை விட்டு விலகிய தாதிகள் மற்றும் மருந்தாளர்கள் குறிப்பிட்ட எண்ணிக்கைக்குள் உள்ளடக்கப் பட்டிருக்கலாம் என்று அவதானிக்கப்பட்டது. | தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் மருந்தாளர்களின் எண்ணிக்கையினை நாளதுவரையாக்கல் செய்வதில் கவனம் செலுத்துவதன் மூலம் எதிர்கால நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்குறிப்பிட்டவாறு |
| (ஆ) | 2005 திசெம்பர் 05 திகதியிடப்பட்ட 14/3/08 (03) ஆம் இலக்க வைத்திய சபை பத்திரம் | சபையில் பதிவு செய்துள்ள அனைத்து வைத்தியர்களும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தமது பதிவினை புதுப்பித்தல் செய்ய வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதிக்குள் 5 ஆண்டுகளாக காலாவதியான பதிவினை உடைய 15,045 வைத்தியர்கள் அவர்களின் பதிவினை புதுப்பித்திருக்கவில்லை, பதிவினை புதுப்பித்தல் செய்வதற்கான முறையான வழிமுறையொன்று சபையினால் இனங்காணப்பட்டு செயல்படுத்தப்பட்டிருக்க வில்லை. அதன் விளைவாக, மீளாய்வாண்டிற்காக ரூபா 18.83 மில்லியன் தொகையான வருமானத்தை சபை இழந்தது. | இது தொடர்பாக தொடர்புடைய வைத்தியர்கள் விழிப்பூட்டல் செய்யப் பட்டுள்ளார்கள். மேலும், குறிப்பிட்ட சில வைத்தியர்களிடம் இருந்து நேர்மறையான பின்னூட்டல்கள் பெறப்படாததால், பதிவினை புதுப்பித்தல் செய்யாத வைத்தியர்கள் சார்பில் எந்தவொரு செயற்பாடுகளையும் செய்வதில்லை எனவும் எந்தவொரு பயிற்சி வகுப்புக்களுக்கும் அவர்களை வழிப்படுத்துதல், வருடாந்த நாட்காட்டிகளை வழங்குதல் மற்றும் 2019 ஆம் ஆண்டிலிருந்து தாமதத்திற்கான அபராதமாக வருடத்திற்கு ரூபா 300 வீதம் விதிப்பதற்கு வைத்திய சபையானது தீர்மானித்துள்ளது. இதன் | வைத்தியர்களின் பதிவினை நாளதுவரையாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | விளைவாக, பதிவினை புதுப்பித்தல் செய்வதில் வளர்ச்சியொன்று அவதானிக்கப் பட்டுள்ளது. | |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்களின் நிதிப்பிரமாணம் 137, 138 மற்றும் 454 மற்றும் தாபனக் கோவையின் அத்தியாயம் XXI | தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் சீருடைகளுக்கு உரித்தற்ற 14 உத்தியோகத்தர் களுக்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 95,800 மற்றும் ரூபா 145,680 செலவு செய்து சீருடைகள் பெறுகை செய்யப்பட்டிருந்தன. மேலும், சீருடைகளின் பெறுவனவு மற்றும் விநியோகம் என்பன இருப்புப் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டிருக்க வில்லை. அந்த கொடுப்பனவுகளை அங்கீகாரமளிப்பதற்கும் சான்றுறுதிப் படுத்துவதற்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் பொருட்களின் கிடைப்பனவை உறுதிப்படுத்தாமலும் இருப்புப் புத்தகங்களில் பதிவு செய்யாமலும் கொடுப்பனவுகளை சான்றுறுதிப்படுத்தி அங்கீகாரமளித்துள்ளனர். | 2012/12 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தாபனப் பணிப்பாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக அமைச்சின் செயலாளரின் அவதானிப்புக் களுடனும் பரிந்துரைகளுடனும் குறிப்பிடப்பட வேண்டும் என்று 2019 யூலை 23 அன்று பொது நிர்வாக அமைச்சு அறிவித்திருந்தது. மேலும், அந்த சீருடைகளின் கிடைப்பனவு மற்றும் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் மற்றும் உழியர்களினால் அவை பொறுப்பேற்கப் படுகின்றமையை அவர்களின் கையொப்பங்களுடன் பதிவு செய்ய வேண்டிய பதிவேடொன்று பராமரிக்கப்படுகின்றது. மேலும், நுகர்வு இருப்புப் புத்தகங்களில் பதிவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | தாபனக் கோவை மற்றும் நிதிப்பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு முரணாக செயல்பட்ட உத்தியோகத்தர் களிடமிருந்து மேற்கூறிய செலவு மிகைக் கட்டணமாக வசூலிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2003 யூன் 02 திகதியிடப்பட்ட 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| | (i) பிரிவு 9.3.1 | பதிவாளர் பதவிக்கு தேவையான ஆட்சேர்ப்புத் திட்டம் எதுவும் வகுக்கப்பட்டிருக்கவில்லை மற்றும் அது தொடர்பிலான முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு பதிவாளரொருவரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு கொண்டிருக்கின்றது. | பதிவாளர் பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டமொன்று வகுக்கப்படுவதுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமும் பெறப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | பிரிவு 6.5.3 | 2018 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையானது 2019 மே 31 இற்கு முன்னதாக பாராளுமன்றத்திற்கு முன்வைக்கப்பட வேண்டுமென்ற போதிலும், இது 2020 யூன் 30 வரையிலும் பாராளுமன்றத்திற்கு முன்வைக்கப் பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டிற்கான வைத்திய சபையின் ஆண்டறிக்கை, அதற்கான அமைச்சரவையின் அமைச்சர்களின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக 2020 சனவரி 17 அன்று சுகாதார மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சின் சுதேச வைத்திய பிரிவுக்கு குறிப்பிடப்பட்டுள்ளது. | தொடர்புடைய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஆண்டறிக்கைகள் முன் வைக்கப்படல் வேண்டும். |
| (உ) | 2014 பெப்ரவரி 17 இன் 01/2014 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை | தொடர்புடைய ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டின் முன்னுரிமைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டம், செயல் காலக் கிரமம் மற்றும் அந்த செயல் நடவடிக்கைகளின் எதிர்பார்க்கப்பட்ட வெளியீடு / விளைவு போன்ற விபரங்கள் என்பன மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்களை உள்ளடங்கியதாக 2020 ஆம் ஆண்டின் வைத்திய சபையின் செயல் நடவடிக்கைத் திட்டத்தினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரமும் எதிர்பார்க்கப்பட்ட வெளியீடு/ விளைவுகளை அடைவதற்கும் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

--------------------

### 2.1 நிதி விளைவுகள்

-----------------------

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவானது முன்னைய ஆண்டுடன் தொடர்புடைய ரூபா 1,906,516 பற்றாக்குறையுடன் ஒப்பிடும் போது ரூபா 272,468 பற்றாக்குறையாக இருந்தது. இது நிதி விளைவுகளில் ரூபா 1,634,048 முன்னேற்றமொன்றை குறிப்பிடுகின்றது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

---------------------------------------------------------------------------------------

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது, மீளாய்வாண்டிற்கான வைத்தியர்களின் பதிவுக்கட்டணங்கள், ஏனைய வருமானம், பொது மேந்தலை செலவு மற்றும் ஏனைய செலவுகள் என்பன முறையே 46 சதவீதம், 12 சதவீதம் மற்றும் 39 சதவீதத்தால் அதிகரித்திருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆயுர்வேத வைத்திய சபையின் வைத்தியர்கள், பாரம்பரிய வைத்தியர்கள், ஆயுர்வேத தாதி உத்தியோகத்தர்கள் மற்றும் மருந்தாளர்களை பதிவு செய்தல், அவர்கள் சார்பில் பரீட்சைகளை நடத்தி அவர்களின் முடிவுகளை வெளியீடு செய்தல் போன்ற செயல் நடவடிக்கைகளின் செயல்முறைகளினை மதிப்பீடு செய்வதற்கான செயல்திறன் குறிக்காட்டிகளை உருவாக்குவதன் மூலம் செயல்திறன் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | செயல்திறன் குறிகாட்டிகளை உருவாக்குவதற்கு தேவையான நடவடிக்கையினை எடுப்பதற்கு வைத்திய சபையின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. | செயல்திறன் குறிகாட்டிகளை உருவாக்குவதன் மூலம் செயல்திறன் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | போலியான வைத்தியர்கள் தொடர்பில் மீளாய்வாண்டிலும் அதற்கு முன்னைய ஆண்டிலும் முறையே ஐம்பத்தொன்பது மற்றும் 13 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்தன. அவற்றில் முறையே 56 மற்றும் 03 முறைப்பாடுகளின் புலனாய்வுகள் 2020 யூலை 03 வரையிலும் பூர்த்தியடைந்திருக்க வில்லை. மற்றும் புலனாய்வுகள் பூர்த்தியடைந்திருந்த 03 மற்றும் 10 முறைப்பாடுகள் மீது தொடர்ந்துவரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. காலத்தின் தேவைக்கேற்ப ஆயுர்வேத சட்டம் மற்றும் ஒழுக்காற்று கட்டளைகள் திருத்தப்பட்டிருக்கவில்லை என்பதனால், விசாரணை செய்யப்பட்ட பெரும்பாலான முறைப்பாடுகள் எச்சரிக்கை மற்றும் அறிவுறுத்தல்களை வழங்குவதுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. | சனாதிபதி அலுவலகத்தின் 2019 நவம்பர் 28 இன் PS/SP/SB/Circular/02/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், வைத்திய சபையின் அனைத்து அங்கத்தவர்களும் இராஜினாமா செய்ததன் பின்னர், அவர்கள் 2020 யூன் 02 அன்று மீண்டும் சந்தித்தனர். அதன் காரணமாக புலனாய்வு குழுவினை நடத்த முடிந்திருக்கவில்லை மற்றும் புதிய சபை கூட்டப்பட்டதன் பின்னர், அந்த முறைப்பாடுகள் தொடர்பான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டு 2020 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டன. மேலும், ஆயுர்வேத வைத்தியர்கள் தொழில்சார் முறைகேடுகளை | ஆயுர்வேத சட்டம் மற்றும் ஒழுக்காற்று கட்டளைகள் என்பன காலத்தின் தேவைக்கேற்ப திருத்தியமைக்கப் படல் வேண்டும் மற்றும் சபைக்கு கிடைக்கப் பெற்ற குறிப்பிட்டளவான முறைப்பாடுகள் அனைத்தும் புலனாய்வு செய்யப்பட வேண்டியதுடன் அதன்மீது தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | செய்வதற்கான போக்கொன்று காணப்படுவதால், 1973 ஆம் ஆண்டின் (ஒழுக்காற்று) கட்டளைகளுக்கு இணங்க அதிகாரச்சட்டத்தின் பிரிவு 18(ஊ) இன் பிரகாரம், 2014 ஒக்தோபர் 15 ஆந் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விதிகளை திருத்தி அமைப்பதற்கு வைத்திய சபையானது 2020 யூலை 07 அன்று இடம்பெற்ற சந்திப்பில் தீர்மானித்திருந்தது. | |

**3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், 10 உத்திகள் தொடர்பாக பூர்த்தி செய்யப்பட வேண்டிய 05 செயல் நடவடிக்கைகளை மீளாய்வாண்டின் போது தொடங்குவதற்கு முடிந்திருக்கவில்லை மேலும், மீளாய்வாண்டின் போது நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த உத்தியுடன் தொடர்பான 03 செயல் நடவடிக்கைகளின் பௌதீக செயல் முன்னேற்றமானது 10 சதவீதத்திற்கும் குறைவான மட்டத்தில் இருந்தது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையினால் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதன் மூலம் 2020 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டத்தினை திருத்தி அமைப்பதற்கும் 2019 ஆம் ஆண்டில் தொடங்குவதற்கு தவறியிருந்த செயல் நடவடிக்கைகளை தொடங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட செயல்திறன் அடையப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதியிடப்பட்ட பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 6.5.1 இன் ஏற்பாடுகள் மற்றும் 2004 பெப்ரவரி 24 ஆந் திகதியிடப்பட்ட 01/2004 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம், நியதிச்சட்ட சபைகளின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டுடன் தொடர்புடைய நிதிக்கூற்றுக்கள் 101 நாட்கள் தாமதத்துடன் 2020 யூன் 09 அன்று முன்வைக்கப்பட்டிருந்தன. | வைத்திய சபையின் 2019 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள் வைத்திய சபையின் புதிய அங்கத்தவர்களை நியமித்ததன் பின்னர் 2020 யூன் 02 அன்று நடைபெற்ற முதலாவது கூட்டத்தில் அங்கீகரிக்கப் பட்டிருந்ததுடன் 2020 யூன் 09 அன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் கையளிக்கப்பட்டது. | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 4.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்திக்கான ‘‘2030 நிகழ்ச்சி நிரலின்’’ பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களும் செயற்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டுடன் தொடர்புடைய அதன் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற செயற்பாடுகளை செயல்படுத்தும் விதம் பற்றி பற்றி சபை அறிந்திருக்கவில்லை. | தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் வைத்திய சபையின் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற செயற்பாடுகளை செயல்படுத்துவதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் 2017 ஆகஸ்ட் 14 இன் என்பி/எஸ்பி/எஸ்டிஜி/17 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |